**களஞ்சியம் – சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Quarterly Peer-Reviewed Open Access Crossref Google Scholar
SJIF Impact Factor 4.355 Multidisciplinary International
: https://doi.org/10.63300/kijts06022026

**Vol. 6 No. 02, August 2026, p612-623** | Available online at: www.tamilmanam.in
*Original Research Paper*

# பக்தியின் பாவை – ஆண்டாள்

## (ஓர் இலக்கிய – பக்தி இயக்க ஆய்வு)

*Bhakti's Paavai – Andal (A Literary – Bhakti Movement Study)*

**முனைவர் மு. கவிதா,**

உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத்துறை, ஸ்ரீமதி இந்திரா காந்தி கல்லூரி,
(பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவுப் பெற்றது), திருச்சி - 620 002.

**Dr. M. Kavitha*,**
*Assistant professor, Department of Tamil, Shrimati Indira Gandhi College,*
*(Affiliated with Bharathidasan University), Tiruchirappalli-2, Tamil Nadu, India.*
***Email**: drkavitha@sigc.edu **ORCiD:** 0009-0009-3303-3128,*

*Article history*
Received: 20-08-2026
Revised: 20-08-2026
Accepted: 24-08-2026
**Published: 25-08-2026**
*Corresponding Author Email:
*drkavitha@sigc.edu*

**Abstract:**
It is evident that the Alvars nurtured Tamil alongside Vaishnavism. Just as the Periya Puranam in Shaivism provides insight into its devotees, the Vishnu Puranam speaks about the Vaishnavite Alvars. What shines through every song in the Naalayira Divya Prabandham is the deep devotion and engagement of the Alvars. Andal is the one who demonstrated to the world through her own life that God can be attained by worshiping with faith and unwavering determination in one's heart. In Vaishnavism, love and devotion toward God are considered supreme, emphasizing that the highest state can only be achieved by worshiping the Divine with selfless love. This perspective is clearly reflected in Andal's verses. The methods of observing the Paavai Nombu (sacred vow) to seek the grace of Lord Krishna can be understood through her Thiruppavai hymns. This research paper analyzes Andal's birth, upbringing, expression of devotion, Paavai Nombu, and its social utility, backed by evidence from primary textual sources.

**Keywords:** *Vaishnavism, Pooram Star, Kothai, Wooden Doll (Marappaachi), Bhagavata Period, Paavai Nombu, Thai Bathing (Thai Neeraadal), Silk Garments, Milk Rice, Akaara Adisil, Worship, Sacred Garden (Nandhavanam), Vatapatrasayi Temple (Vadaperungoil).*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

**ஆய்வுச் சுருக்கம்**

ஆழ்வார்கள் வைணவத்தை வளர்த்ததோடு தமிழையும் வளர்த்தனர் என்பதை அறிய முடிகின்றது. அடியார்கள் பற்றி அறிந்து கொள்வதற்குச் சைவத்தில் பெரிய புராணம் என்ற நூல் இருப்பதைப் போன்று, வைணவ ஆழ்வார்களைப் பற்றி விஷ்ணு புராணம் குறிப்பிடுகின்றது. நாலாயிர திவ்விய பிரபந்தத்தில் ஒவ்வொரு பாடலிலும் வெளிப்படுவது ஆழ்வார்களின் ஆழ்ந்த பக்தியின் ஈடுபாடு ஆகும். மனத்தில் நம்பிக்கையுடனும் உறுதியுடனும் வழிபட்டால் இறைவனை அடையமுடியும் என்ற உண்மையைத் தனது வாழ்க்கையின் மூலம் உலகுக்கு உணர்த்தியவர் ஆண்டாள் ஆவார். வைணவத்தில் கடவுளின் மீது கொண்ட அன்பும் பக்தியும் மிக உயர்ந்ததாகக் கருதப்படுகிறது. பக்தி நெறியில் தன்னலமற்ற அன்புடன் தெய்வத்தை வழிபட்டால் மட்டுமே உன்னத நிலை அடைய முடியும் என வலியுறுத்துகிறது. இச்சிந்தனை ஆண்டாள் பாடல்களில் வெளிப்படுவதைக் காணமுடிகின்றது. கண்ணனின் அருள் பெற வேண்டி, பாவை நோன்பு இருந்த முறை பற்றிய செய்திகளைத் திருப்பாவைப் பாடல்களில் அறிய முடிகின்றது. இக்கட்டுரை ஆண்டாளின் பிறப்பு, வளர்ப்பு, பக்தி வெளிப்பாடு, பாவை நோன்பு மற்றும் அதன் சமூகப் பயன்பாடு ஆகியவற்றை மூல நூல் சான்றுகளுடன் ஆய்வு செய்கிறது.

***திறவுச் சொற்கள் (Key Words)***

வைணவம், பூர நட்சத்திரம், கோதை, மரப்பாச்சி, பாகவதக் காலம், பாவை நோன்பு, தை நீராடல், பட்டாடை, பால் சோறு, அகார அடிசில், வழிபாடு, நந்தவனம், வடபெருங்கோயில்.

**முன்னுரை**

ஆன்மிக சிந்தனையின் முடிவில் மனிதன் தன்னையறிந்து, தன்னிலை மறந்து, முழுமையாகத் தெய்வத்தின் கருணையில் வாழ்க்கையைச் செலுத்த வேண்டும் என்பதே அதன் கொள்கையாகும். "நான் என்னும் எண்ணத்தை மறந்து இறைவனை அனுபவிக்கும் நிலை" என்பது வைணவத்தின் இறுதி இலக்காகும். ஆண்டாள் ஒன்பதாம் – பத்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த வைணவ ஆழ்வார்களுள் ஒருவர். வைணவம் போற்றும் பன்னிரு ஆழ்வார்களில் இவர் ஒருவரே பெண்ணாவார். ஆண்டாள் அருளிய திருப்பாவைப் பாடல்களின் வழியாக இறைவன் மேல் அவர் கொண்ட ஆழ்ந்த பக்தியை அறிய முடிகின்றது.

**1. ஆண்டாளின் பிறப்பு**

செந்தமிழ் தழைத்தோங்கிய நாடு பாண்டிய நாடு. அந்நாட்டின்கண் இயற்கையிலேயே இறைத்தன்மை பெற்ற ஊர் ஸ்ரீவில்லிபுத்தூர் ஆகும். அன்னங்கள் எங்கும் சூழ்ந்து விளையாடும் ஸ்ரீவில்லிபுத்தூர்,

பின்னாளில் ஆண்டாளால் சிறப்பித்துக் கூறப்பட்ட ஊராக மாறியது. விஷ்ணுசித்தர் என்று அழைக்கப்படும் பெரியாழ்வார் ஆண்டாளின் வளர்ப்புத் தந்தை ஆவார். அத்தகைய வில்லிபுத்தூர் நகரத்தில் ஆண்டாள் பிறந்து அந்நகரம் பெருமையடையச் செய்தார்.

பெரியாழ்வார் எனும் விஷ்ணுசித்தர் நந்தவனத்தில் துளசிச் செடியின் கீழே கிடந்த ஓர் அழகிய பெண் குழந்தையை எடுத்து, 'கோதை' என்று பெயரிட்டு வளர்த்து வந்தார். ஆண்டாள் பூர நட்சத்திரம் கூடிய செவ்வாய்க்கிழமையில் பிறந்தார் என பெரியாழ்வார் திருமொழி பின்வருமாறு பதிவு செய்கிறது (பெரியாழ்வார்):

> *"கோதை பிறந்த ஊர்; கோவிந்தன் வாழுமூர்*
> *சோதி மணிமாடம் தோன்றுமூர்; நீதியால்*
> *நல்ல பத்தர் வாழுமூர் நான்மறைகள் ஓதுமூர்*
> *வில்லிபுத்தூர் வேதக் கோனூர் விளங்கினார்."*

**2. விளையாட்டுப் பருவம்**

கோதை இளம்பருவத்தில் சிற்றாடை கட்டும் பருவத்தினராய், மழலை மாறாமல் விளையாட்டிலும் கேளிக்கையிலும் பொழுது போக்கினாள். சிற்றில் செய்து, மண்ணால் செய்த பாண்டங்களைக் கொண்டு, மரப்பாச்சி பதுமை வைத்து, மண்சோறு சமைத்து யாவருக்கும் பகிர்ந்து கூட்டாஞ்சோறு சமைக்கும் பருவத்தில் இருந்தார். கோதையின் செயல்கள் யாவும் சிறப்பாக இருந்தாலும், அவை பார்ப்போர்க்குக் கேள்விக்குறியாக அமைந்தன. சிற்றில் காட்டி விளையாடும்போது அரங்கனுக்குத் தனி அறை அமைக்கின்றார்; அங்குப் பெருமாள் அமர்கின்றான். அங்கு அவனுடைய சங்கு, சக்கரம், தண்டு, வாள், வில் ஆகிய கருவிகள் வரையப்பட்டுள்ளன. இக்காட்சியைப் பெரியாழ்வார் பின்வருமாறு பதிவு செய்கிறார் (பெரியாழ்வார்):

> *"செய்ய நூலின் சிற்றாடை*
> *செப்புகுடுக்கும் வல்லள் அல்லள்"*

இறைவனாகிய கண்ணபிரான் மீது காதல் கொண்டு பித்துப்பிடித்து நிற்கும் தன் இளமகளின் அறியா நிலையைக் கண்டு ஒரு தாய் வருந்திப் பாடும் சூழலில் இப்பாடல் அமைந்துள்ளது.

**3. அரங்கன் மீது காதல் கொண்ட கோதை**

ஸ்ரீவில்லிபுத்தூரில் குடிக்கொண்டிருக்கும் பரந்தாமனுக்கு நாள்தோறும் புனித மலர்களால் தொடுக்கப்பட்ட மாலையை அணிவிப்பதைத் தனது வாழ்நாள் கடமையாகச் செய்து வந்தவர்



KALANJIYAM

பட்டர்பிரான் எனும் பெரியாழ்வார் ஆவார். அவர் பெருமாளுக்கு மாலை சாத்துவதற்காக ஆலய நந்தவனத்திற்குச் சென்று மலர் கொய்து கொண்டிருந்தபோது, துளசிச் செடி அருகில் பொன் சிலையைப் போன்ற பெண் குழந்தை ஒன்று விளையாடிக் கொண்டிருப்பதைக் கண்டார்.

அக்காட்சியைக் கண்ட பெரியாழ்வார் மகிழ்ச்சியடைந்து, இறைவன் தமக்குக் கொடுத்த வரம் என எண்ணி, அக்குழந்தையைத் தன் கையில் எடுத்து மனைவியாகிய விரஜையிடம் கொடுத்தார். அவரும் அக்குழந்தையைத் திருமாலே தங்களுக்குக் கொடுத்ததாகக் கருதி, பக்தியும் காதலும் மிகுந்து குழந்தையை அணைத்துக் கொண்டு கண்ணீர் சொரிந்தார். இதனை மணவாள மாமுனிகள் தமது உபதேச ரத்தின மாலையில் பின்வருமாறு பதிவு செய்கிறார் (மணவாள மாமுனிகள்):

> *"இன்றோ திருவாடிப்பூரம் எமக்காக*
> *அன்றோ ஆண்டாள் அவதரித்தாள் – குன்றாத*
> *வாழ்வான வைகுந்த வான்போகம் தன்னை இகழ்ந்து*
> *ஆழ்வார் திருமகளாராய்"*

இன்றுதான் திருவாடிப்பூரம். இத்தினத்திலேயே ஸ்ரீ பூமிப்பிராட்டி ஸ்ரீவைகுண்டத்தில் இருக்கும் எல்லையில்லாத ஆனந்த அனுபவத்தை விட்டு, பெரியாழ்வாரின் திருமகளான ஆண்டாள் நாச்சியாராக இங்கு வந்து அவதரித்தாள் என மணவாள மாமுனிகள் பாடிப் பெரியாழ்வாரைப் புகழ்ந்தார்.

### 4. பேதை நீங்கிய பெதும்பை

ஆண்டாள் குழந்தைப் பருவம் மாறிக் குமரிப் பருவம் அடைகின்றாள். வைகறையில் துயில் எழும் பழக்கம் இருந்தது. தந்தையுடன் மலர்வனம் புகுந்து நீர் பாய்ச்சுதல், மலர் பறித்தல், மாலை தொடுத்தல் ஆகிய பணிகளைச் செய்து வந்தாள். ஆயர்பாடியில் வெண்ணெய் உண்ட கண்ணனின் கோலம் அவள் மனதில் உதிக்கின்றது; அவனை அடைவதற்கே மனம் வழிகளைத் தேடுகின்றது.

எனவேதான் இறைவனுக்கு இடம்பெறும் பொருள்களைக் காணும்போது அவை தனக்கு உரிமையுடையன என்ற சிந்தனை அவளுக்கு உறுதியாகின்றது. இறைவனுக்குப் போட மாலைகள் கோதையின் கழுத்தில் சேர்கின்றன; அதைத் தான் அணிந்து கொள்ளும் துணிவு பிறக்கின்றது. திருமாலையே கணவனாகப் பெற வேண்டுமென்று மனிதர் ஒருவரை மணப்பதில்லை என உறுதியாக இருந்தாள். பருவம் வந்த அளவில் "மானிடர்க்கென்று பேச்சுப்படில் வாழ்கில்லேன்" என்று கூறி, அரங்கனையே மணப்பது என்று கோதை முடிவு செய்தாள்.

### 5. சூடிக்கொடுத்த நாச்சியார்

பெரியாழ்வார் வடபெருங்கோயிலுடையானுக்கு என்று பயபக்தியுடன் கட்டி வைத்திருந்த அழகான மாலை ஒன்றை, தந்தை இல்லாதபோது கோதை தான் அணிந்து, அழகே வடிவான இறைவனுக்குத் தான் ஏற்ற துணைவியா என்று அழகு பார்த்தாள் (பெரியாழ்வார்):

> *"காறை பூணும், கண்ணாடி காணும் தன்*
> *கையில் வளை குலுக்கும்,*
> *கூறை உடுக்கும், அயர்க்கும் தன்*
> *கொவ்வைச் செவ்வாய்த் திருத்தும்"*


என்று சிறந்த அணிகலன்கள் அணிவாள்; உயர்ந்த பட்டாடை உடுத்தித் தன்னை அலங்கரித்துக் கொள்வாள். கழுத்தில் அணியக்கூடிய அணிகலன் அணிந்து கொண்டும், அடிக்கடி கண்ணாடி பார்த்துக் கொண்டும், தன் கையில் உள்ள வளையல்களைத் தானே குலுக்கிக் கொள்வாள். பின் ஏதோ நினைத்து அயர்ந்து கொள்வாள்; அடிக்கடி தன் கொவ்வைப் பழம் போன்ற சிவந்த இதழ்களை ஒழுங்குபடுத்திக் கொள்வாள். இவ்வாறே நாட்கள் கழிந்தன.

### 6. பெரியாழ்வார் கவலையும் கனவும்

ஒரு நாள் கண்ணனுக்கெனத் தொடுத்த மாலையைக் கன்னியிளங்கோதை அணிந்திருப்பதைக் கண்ட பட்டர்பிரானின் நெஞ்சம் பதறியது; பரந்தாமனுக்கு அன்று பூமாலைச் சாற்றாதொழிந்தார். துணுக்குற்று மகளைக் கடிந்தார்; அன்று முழுவதும் உண்ணாது, உறங்காது, பழி நேர்ந்தது என வருந்தினார்.

அன்றிரவு பெரியாழ்வாரின் கனவில் பரந்தாமன் தோன்றி, 'ஏன் மாலை சூட்ட வரவில்லை?' என்று கேட்டார். நடந்ததை ஆழ்வார் கூற, கோதையின் மாலையின்றித் தம் தோள்கள் வாட்டமுற்றிருப்பதாகக் கூறி, அதனைக் கொண்டுவரும்படி ஆணையிட்டார். கோதை சூட்டி மகிழ்ந்ததைக் கோபாலன் ஏற்று மகிழ்ந்தார்; அதனால் 'சூடிக்கொடுத்த சுடர்க்கொடி' என்ற பெயரால் கோதை அழைக்கப்பட்டார். உலக வழக்கப்படி மணம் செய்து கொள்ள மறந்த மகளை எண்ணி ஆழ்வார் வருந்தினார்; ஆனால் பருவம் வளருந்தோறும் அவளது பண்பும் இறைப்பற்றும் உடன் வளர்ந்தன; கடல் வண்ணன் மேலான காதல் கரை புரண்டது.

**https://doi.org/10.63300/kijts06022026.57**




*படம் 1: ஆண்டாளின் வாழ்க்கைப் பயணத்தில் இடம்பெறும் ஏழு முக்கியக் கட்டங்கள் — (1) பிறப்பு, (2) விளையாட்டுப் பருவம், (3) அரங்கன் மீது காதல், (4) பேதை நீங்கிய பருவம், (5) மாலை சூடிக்கொடுத்தல், (6) பாவை நோன்பு, (7) கோதை திருமணம். (ஆசிரியர் வடிவமைத்த விளக்கப்படம்)*

### 7. ஆண்டாளின் பாவை நோன்பு

பாகவத காலம் என்பது பொதுவாக இந்து மத வரலாற்றில் கிருஷ்ணரின் அவதாரக் காலம், அல்லது பக்தி இயக்கத்தின் அடிப்படையான பாகவத புராணம் இயற்றப்பட்டுப் பரவிய காலத்தைக் குறிக்கிறது. இக்காலத்தில் விரதம் இருந்து ஆயர் பெண்கள் கண்ணனை அடைந்ததை எண்ணியும், தமிழர் மரபுப்படி பாவை நோன்பு, தை நீராடல் என்பதைத் திருப்பாவைப் பாடல்களில் அறிய முடிகின்றது (ஆண்டாள்):

> *"மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்;*
> *நீராடப் போதுவீர்! போதுமினோ, நேரிழையீர்!*
> *சீர்மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்!*
> *கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன்,*
> *ஏரார்ந்த கண்ணி யசோதை இளஞ்சிங்கம்,*
> *கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல்முகத்தான்*
> *நாராயணனே, நமக்கே பறைதருவான்,*
> *பாரோர் புகழப் படிந்தேலோ ரெம்பாவாய்."*

வேதம் அனைத்துக்கும் வித்து என்று போற்றப்படுகிற கோதைத் தமிழ் எனும் இப்பாடல் திருப்பாவையின் முதல் பாடல் ஆகும். இதனால் பாவை நோன்பு நோற்கும் காலம் மார்கழி மாதம் என்பதை அறிய முடிகின்றது. சிறந்த ஆபரணங்களை அணிந்த, வளம் நிறைந்த திரு ஆயர்பாடியின் செல்வச் சிறுமியர்களாகிய நாம் எதிர்பார்த்திருந்த மார்கழி மாதப் பௌர்ணமி தினம் இன்று நல்ல நாள்



KALANJIYAM

ஆகும்; அனைவரும் கூடி மார்கழி நீராட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும் என்று அழைப்பதாக அமைந்த பாடல் இது. கூர்மையான வேலாயுதம் கொண்ட நந்தகோபாலரின் திருமகன் கண்ணன், அழகிய கண்களை உடைய யசோதைக்கு வாய்த்த சிங்கக்குட்டி போன்றவன்; அவன் நாராயணனாகிய பரம்பொருள் ஆதலால் நோன்பின் பலனை அருள்வான் என்பது இப்பாடலின் பொருளாகும்.

பரிபாடல் உணர்த்தும் 'அம்பாவாடல்' எனும் சடங்கே தை நீராடல் என்றும், பின்னர் மார்கழி நீராடல் என்றும் வழங்கி வந்துள்ளது என்பதைப் பின்வரும் பரிபாடல் அடிகள் விளக்குகின்றன (பரிபாடல்):

> *"வையெயிற்றவர் நாப்பண் வகை அணிப் பொலிந்து – நீ*
> *கையில் நீராடிய தவம் நிலைப்பாடு வாயோ"*

வைகை ஆற்றின் நடுவே, கூர்மையான பற்களையுடைய பெண்களுடன் ஆபரணங்கள் அணிந்து அழகுடன் நீராடிய அச்சிறப்பான நிலையை அடைய, முற்பிறவியில் செய்த தவம் எத்தகையது என இப்பாடல் விளக்குகிறது.

### *பாவை நோன்பு என்பதன் இயல்பு*

நோன்பு என்பது ஏதேனும் ஒரு காரணம் கருதி, மன உணர்வுகளைக் கட்டுப்படுத்தி, இறைவனைச் சிந்தித்து, தான் எண்ணியது ஈடேற நோற்பது ஆகும். இதனை வள்ளுவரும் திருக்குறளில் பின்வருமாறு உறுதிசெய்கிறார் (பரிமேலழகர்):

> *"வேண்டிய வேண்டியாங்கு எய்தலால் செய்தவம்*
> *ஈண்டு முயலப் படும்."*

ஒருவர் தான் விரும்பிய பயன்களைத் தான் விரும்பியபடியே தவ வலிமையால் அடைய முடியும் என்பதால், செய்யத்தக்க தவத்தை மனிதர்கள் இவ்வுலகிலேயே விரைந்து முயன்று செய்ய வேண்டும் என வள்ளுவர் மேலும் வலியுறுத்துகிறார் (பரிமேலழகர்):

> *"கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின்*
> *ஆற்றல் தலைப்பட்டவர்க்கு."*


தவநெறியால் ஆத்ம வலிமையைப் பெற்ற மகான்களுக்குத் தம்மிடம் வருகின்ற கூற்றத்தையும் எதிர்நின்று வெற்றி கொள்ள முடியும் என்பதை இக்குறள் உணர்த்துகின்றது. சாவித்திரி நோற்ற நோன்பும், மார்க்கண்டேயன் மேற்கொண்ட தவமும் இத்தகைய ஆற்றலுடையவை என்பதைப் புராணங்கள் உணர்த்துகின்றன.

***நோன்பின் பயன்***

இவ்வழிபாட்டு முறையால் மகளிர்க்கும் நாட்டிற்கும் நன்மை கிடைக்கின்றது. நல்ல மழை பெய்தல், நாட்டின் வளம் பெறுதல், பெண்களின் மனம் குளிர்தல், நல்ல கணவனைப் பெறுதல் என்பன அப்பயன்களாகும் (ஆண்டாள்):

> *"ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி*
> *நாங்கள் நம்பாவைக்குச் சாற்றி நீராடினால்*
> *தீங்கின்றி நாடெல்லாம் திங்கள்மும் மாரி பெய்து*
> *ஓங்கு பெருஞ் செந்நெல் ஊடு கயல் உகளப்*
> *பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்பத்*
> *தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி*
> *வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்கள்*
> *நீங்காத செல்வம் நிறைந்தேலோ ரெம்பாவாய்!"*

மாவலியிடம் வாமனனாய் மூன்றடி மண் கேட்டு, திரிவிக்கிரமனாக உயர்ந்த உத்தமனான திருமாலின் திருநாமங்களைப் பாடிப் பாவை நோன்பு நோற்று நீராடினால், நாடெல்லாம் மாதம் மூன்று மழை பொழியும்; நெற்பயிர்கள் ஓங்கி வளரும்; அப்பயிர்களின் ஊடே கயல் மீன்கள் துள்ளி விளையாடும் நீர் நிலைகளில் அழகிய வண்டுகள் உறங்கி மகிழும் குவளை மலர்கள் பூக்கும்; செல்வ வளம் பெருகும்; வள்ளல் தன்மையுடைய பெரும் பசுக்கூட்டங்கள் எங்கும் நிறைந்திருக்கும் என்பது இப்பாடலின் பொருளாகும்.




*படம் 2: பாவை நோன்பு வழிபாட்டின் நான்கு கட்ட அமைப்பு — (1) மார்கழி நீராடல் மேற்கொள்ளல், (2) கூட்டாக நோன்பு நோற்றல், (3) கண்ணனிடம் பரிசு / பலன் வேண்டல், (4) பால்சோறு படைத்து நோன்பு நிறைவு செய்தல். (ஆசிரியர் வடிவமைத்த விளக்கப்படம்)*

***கூட்டு வழிபாட்டால் மகளிர் பெற்ற பலன்கள்***

ஆண்டாளின் தலைமையில் பெண்கள் கூடி, மனக் கட்டுப்பாட்டுடனும் மன உறுதியுடனும் வழிபட்டு, நாட்டு நலம் வேண்டி முறையிட்டுக் கண்ணனிடம் பரிசுகளும் பெறுகின்றனர் (ஆண்டாள்):

> *"கூடாரை வெல்லும்சீர்க் கோவிந்தா! உன்தன்னைப்*
> *பாடிப் பறைகொண்டு யாம்பெறு சம்மானம்*
> *நாடு புகழும் பரிசினால் நன்றாகச்*
> *சூடகமே தோள்வளையே தோடே செவிப்பூவே*
> *பாடகமே என்று அனைய பல்கலனும் யாம் அணிவோம்*
> *ஆடை உடுப்போம் அதன்பின்னே பாற்சோறு*
> *மூட நெய்பெய்து முழங்கை வழிவார*
> *கூடி இருந்து குளிர்ந்தேலோர் எம்பாவாய்."*

நோன்பினை முடித்து, அணிகலன் பூண்டு, ஆடை உடுத்திப் பால்சோறு படைத்துக் கூடியிருந்து மகிழ்ந்து, "ஏழேழ் பிறவிக்கும் உன்னை நினைந்து வணங்கி உனக்கு ஆட்செய்து வாழ அருள் புரிய" வேண்டினர். நோன்பு முடித்து அக்கார அடிசில் கண்ணனுக்குப் படைத்து நோன்பை நிறைவு செய்கின்றனர்.

**8. திருப்பாவையும் நாச்சியார் திருமொழியும்**

சூடிக்கொடுத்த நாச்சியார், இன்று வழங்கும் திருப்பாவை, நாச்சியார் திருமொழி என்னும் நூல்களைப் பாடிக்கொடுத்த நாச்சியார் ஆனார். நாச்சியார் திருமொழியில் இடம்பெறும் 'வாரணம் ஆயிரம்' எனும் கனவுப் பாடல்கள் வைணவ இல்லத் திருமணங்களில் தவறாது ஓதப்படுகின்றன (ஆண்டாள்):

> *"வாரணம் ஆயிரம் சூடி வலஞ்செய்து*
> *நாரணன் நம்பி நடக்கின்றான் என்று எதிர்*
> *பூரண பொற்குடம் வைத்துப் புறம் எங்கும்*
> *தோரணம் நாட்டக் கனாக்கண்டேன் தோழீ! நான்."*

நல்ல மழை பெய்யவும், வழிபடும் கன்னிப் பெண்களுக்கு நல்ல கணவர் அமையவும், இம்மையில் எல்லா வகைச் செல்வங்களையும் பெற்று நல்வாழ்க்கை அமைய வேண்டும் என்றும், மார்கழி மாதம் முப்பது நாட்களிலும் விடியற்காலைப் பொழுது புலரும் முன்பே நீராடி நோன்பு நோற்பர் என்றும் திருப்பாவை நூலின் வழியாக அறிய முடிகின்றது.

ஆண்டாள் கண்ணனை நினைத்து மனமுருகித் திருப்பாவை நோன்பு நோற்றதற்கு நிகராகச் சைவத்துள் மாணிக்கவாசகர் மனமுருகித் திருவெம்பாவை பாடியுள்ளார். பக்தி இயக்க காலத்தில் சைவமும் வைணவமும் தமக்குள் போட்டி போட்டுச் செயல்பட்டதை இதன் வழி அறியமுடிகிறது.

### 9. கோதை திருமணம்

பெரியாழ்வார் கனவில் திருமால் தோன்றி, கோதையை மணப்பெண்ணாக எல்லா அலங்காரங்களுடனும் திருவரங்கப் பெருநகருக்கு அழைத்து வருமாறு ஆணையிட்டான். ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து மூடு பல்லக்கில் அரசகுமாரி போலக் கோதை அழைத்துச் செல்லப்பட்டாள். அரங்கன் திருமுன் பல்லக்கிலிருந்து இறங்கி, பட்டாடையை உதறி உடுத்திப் புது மணப்பெண் போல அரங்கனை நோக்கிக் கோதை நடந்தாள். 'என் அரங்கத்தின்னமுதர், கடலழகர், வாயழகர், கண்ணழகர்' என்று காலமெல்லாம் தான் காதலித்த அரங்கனைக் கண்ட அவள், அவன் உறங்கும் நாகணையை மிதித்தேறி அவன் திருவடிகளில் கலந்துவிட்டாள். இதுவே வைதீகமான (பழமையான) ஆண்டாள் திருக்கல்யாணம் ஆகும்.

'ஜனகராமனைப் போல் நீரும் நமக்கு மாமனாராகி விட்டீர்' என உருவமற்ற ஒளி எழுந்தது எனத் தலைமகனுடன் தலைமகளைப் பற்றி பெரியாழ்வார் பின்வருமாறு பாசுரம் பாடுகிறார் (பெரியாழ்வார்):

> *"ஒருமகள் தன்னை யுடையேன்*
> *உலகம் நிறைந்த புகழால்*
> *திருமகள் போல வளர்த்தேன்*
> *செங்கண்மால் தான்கொண்டு போனான்*
> *பெருமகளாய்க் குடி வாழ்ந்து*
> *பெரும்பிள்ளை பெற்ற யசோதை*
> *மருமகளைக் கண்டு கந்து*
> *மணாட்டுப் புறம் செய்யுங் கொலோ"*

ஒருமகள் எனக்கு இருக்கிறாள்; உலகம் நிறைந்த புகழ்பெற்ற திருமகளைப் போல அவளை வளர்த்தேன்; அவளைச் செம்மையான கண்களை உடைய மாலவன் தன்னோடு கொண்டு போனான். ஆயர் குடிக்குப் பெருமகளாக வாழ்ந்து பெருமை மிக்க பிள்ளையைப் பெற்ற யசோதை, மருமகளாகிய என் மகளைக் கண்டு விரும்பி மகிழ்ந்து, மருமகளாக ஏற்றுக் குடித்தனம் வைப்பாளோ? என்பது இப்பாசுரத்தின் பொருளாகும்.

ஆன்மாவான உயிர் இறைவன் திருவடிகளில் இணைவதையே இக்காட்சி குறிக்கிறது. வைணவத்தில் ஆண்டாள், திருப்பாணாழ்வார் ஆகிய இருவருக்கு மட்டுமே இப்பேறு வாய்த்தது. பெரியாழ்வார் மற்றும் ஸ்ரீவில்லிபுத்தூர் பெருமக்கள் வேண்டிக் கொள்ளுதற்கிணங்க, அன்னையின் கனவுத் திருமணத்தை நனவாக்கி முறைப்படித் திருமணம் புரிந்து கொண்டான் அரங்கன் என்பது வழிவழியாக இன்றும் ஸ்ரீவில்லிபுத்தூரில் கூறப்படும் கதையாகும். ஆண்டாள் நாச்சியாருடன் இன்றும் ரங்கமன்னர் எழுந்தருளிப் பக்தர்களைக் காத்தருள்கின்றான்.

## 10. ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோயில் தேரோட்டம்

விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூரில் உள்ள ஆண்டாள் கோயில் மிகவும் பிரசித்தி பெற்றது; மங்களாசாசனம் பெற்ற கோயில்களில் இத்தலமும் ஒன்றாகும். இங்குள்ள மூலவர் வடபத்ரசயனர் (ரெங்கமன்னார்); இவர் சுயம்பு மூர்த்தியாக அருள்பாலிக்கிறார். ஆண்டாள், ரெங்கமன்னார், கருடாழ்வார் ஒருசேரக் காட்சி அளிப்பது இத்தலத்திற்கு மேலும் பெருமை சேர்க்கிறது.

வரலாற்றுச் சிறப்புமிக்க இக்கோயிலில் ஆண்டு முழுவதும் திருவிழாக்கள் நடைபெற்றாலும், ஆண்டாள் பிறந்த ஆடிப்பூரத் திருவிழா மிகவும் கோலாகலமாக நடைபெறும். ஆண்டாள் கோயில் தேரில் ராமாயணம், மகாபாரதம் ஆகியவற்றின் சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன; அவ்வாறே ஆண்டாளின் வாழ்க்கை வரலாறு, கலைகள் குறித்த சிற்பங்கள் அனைத்தும் இத்தேரில் செதுக்கப்பட்டுள்ளன. பொதுவாக அனைத்துக் கோயில்களிலும் சுவாமிக்கும் அம்பாளுக்கும் தனித்தனியே தேர் இருக்கும்; ஆனால் ஆண்டாள் கோயிலில் பெருமாளும் அம்பாளும் ஒருசேர மணக்கோலத்தில் காட்சி அளிப்பதால், இக்கோயிலில் ஒரே தேரில் ஆண்டாளும் ரெங்கமன்னாரும் மணக்கோலத்தில் எழுந்தருளுகின்றனர். இது வேறு எங்கும் இல்லாத ஒரு தனிச்சிறப்பாகும்.

ஆடி மாதம், ஆண்டாள் பிறந்த ஆடிப்பூர நட்சத்திரத்தன்று தேரோட்டம் நடைபெறும். இதற்காக வைகாசி மாதம் தேரைச் சரி செய்யும் பணி தொடங்கிவிடும்; இதையடுத்து அலங்காரப் பணி ஆடி மாதம் வரை நடைபெறும். தேரோட்டத் திருவிழாவில் தமிழ்நாடு மட்டுமின்றிப் பல்வேறு மாநிலங்களிலிருந்தும் எண்ணற்ற பக்தர்கள் கலந்துகொள்வர். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இக்கோயிலில் தேரோட்டம் நடைபெற்று வந்துள்ளது. ஆண்டாள் கோயில் தேர் தமிழகத்தின் இரண்டாவது பெரிய தேர் ஆகும்.

## தொகுப்புரை

பன்னிரு ஆழ்வார்களும் தங்களின் பாடல்களின் வழியாகத் திருமாலின் அருளைப் பெறுவதற்காக முழு மனத்துடன் அவரைக் காதலிக்கும் பக்தியின் நிலையை வெளிப்படுத்தினர். ஆண்டாள் திருமால் மீது

கொண்ட காதலைத் திருப்பாவையின் பாடல்களின் மூலம் அறிய முடிகிறது. மேலும், சூடிக்கொடுத்த நாச்சியார் என்ற சிறப்புப் பெயர் பெற்ற வரலாறு, ஆண்டாளின் பாவை நோன்பு, அதன் சமூகப் பயன், கோதையின் திருமணம் ஆகிய செய்திகள் இக்கட்டுரையில் தொகுத்து ஆய்வு செய்யப்பட்டுள்ளன. மனத் தூய்மையுடனும் தன்னலமற்ற அன்புடனும் இறைவனை வழிபட்டால் உன்னத நிலை எய்தலாம் என்ற உண்மையை ஆண்டாளின் வாழ்க்கையும் பாடல்களும் இன்றளவும் நமக்கு உணர்த்திக் கொண்டிருக்கின்றன என்பது இவ்வாய்வின் முடிவாகும்.

## துணைநூற் பட்டியல் (Works Cited)

[1.] மணவாள மாமுனிகள். *உபதேச ரத்தின மாலை*. ஸ்ரீவைஷ்ணவ சுதர்சனம், 1970.

[2.] பெரியாழ்வார். *பெரியாழ்வார் திருமொழி*. ஸ்ரீ ஜனார்த்தனன் பிரிண்டிங் வொர்க்ஸ், 1936.

[3.] ராஜகோபாலன், டி. எஸ்., ஆசிரியர். *ஆண்டாள் நாச்சியார் திருமொழி*. மைலட் பப்ளிகேஷன்ஸ், 1985.

[4.] பெரியாழ்வார். *திருப்பல்லாண்டு*. ஸ்ரீநிகேதன் அச்சுக்கூடம், 1985.

[5.] தண்டபாணி, துரை., ஆசிரியர். *ஆண்டாள் திருப்பாவை*. சாரதா பதிப்பகம், 2019.

[6.] பரிமேலழகர், ஆசிரியர். *திருக்குறள்*. மணிவாசகர் பதிப்பகம், 2003.

[7.] இமயவரம்பன். *ஆண்டாள் நாச்சியாரின் நாச்சியார் திருமொழி*. மெய்யப்பன் பதிப்பகம், 1998.

[8.] நாதமுனி, தொகுப்பாசிரியர். *நாலாயிர திவ்யப் பிரபந்தம்*. நாலாயிர திவ்யப் பிரபந்த வெளியீட்டகம், 1971.

[9.] "திருப்பாவை." *தமிழ் விக்கிப்பீடியா*, ta.wikipedia.org. அணுகிய நாள் 7 செப். 2026.

[10.] "பெரியாழ்வார் திருமொழி." *தமிழ் விக்கிப்பீடியா*, ta.wikipedia.org. அணுகிய நாள் 7 செப். 2026.

[11.] "நாச்சியார் திருமொழி." *தமிழ் விக்கிப்பீடியா*, ta.wikipedia.org. அணுகிய நாள் 7 செப். 2026.

[12.] "பெரியாழ்வார் திருமொழி நூல் பதிவு." *தமிழ் இணையக் கல்விக் கழகம்*, tamilvu.org.

**ஆசிரியர் அறிவிப்பு — நலன் முரண்பாடு பற்றிய கூற்று**

இக்கட்டுரையின் ஆசிரியர், இவ்வாய்வுக் கட்டுரையின் எழுத்துப்பணி தொடர்பாக எவ்வித நிதிசார், தனிப்பட்ட அல்லது தொழில்முறை நலன் முரண்பாடும் இல்லை என உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறார். இக்கட்டுரையானது முற்றிலும் கல்விசார் மற்றும் ஆய்வு நோக்கத்திற்காக மட்டுமே தயாரிக்கப்பட்டுள்ளது; இதற்கு எவ்வித நிதி உதவியோ, நிறுவன ஆதரவோ பெறப்படவில்லை. இதில் பயன்படுத்தப்பட்டுள்ள அனைத்து மூலநூல் மேற்கோள்களும், இணையவழி ஆதாரங்களும் அறிவுசார் நேர்மையுடன், உரிய சான்றுடன் இணைக்கப்பட்டுள்ளன.